## 6th Social Science Lesson 9 Questions in Tamil - வரலாறு

## 9. பேரரசுகளின் காலம்: குப்தர்

1. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வட இந்தியாவில் குஷாணர்களாலும், தெற்கே சாதவாகனர்களாலும் நிறுவப்பட்டிருந்த வலிமை வாய்ந்த பேரரசுகள் வலிமையை இழந்தன.

2. இச்சூழலில் சந்திரகுப்தரால் குப்த வம்சம் நிறுவப்பட்டது.

3. குப்தர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், வர்த்தன அரச வம்சத்தை சேர்ந்த ஹர்ஷர் வட இந்தியாவை ஆட்சி புரிந்தார்.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

2. சரியான இணையைத் தேர்ந்தெடு.

1. அலகாபாத் தூண் கல்வெட்டு – சமுத்திரகுப்தர்

2. உதயகிரி குகைக் கல்வெட்டு – முதலாம் சந்திரகுப்தர்

3. பிதாரி தூண் கல்வெட்டு – ஸ்கந்த குப்தர்

A) அனைத்தும்

B) 1, 2

C) 2, 3

D) 1, 3

3. குப்தர்கள் கால இலக்கியச் சான்றுகளில் தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) நீதிசாஸ்திரம் – நாரதர்

B) ஹர்ஷ சரிதம் – பாணர்

C) தேவி சந்திர குப்தம் – காளிதாசர்

D) நாகநந்தா – ஹர்ஷர்

4. ஹர்ஷர் இயற்றிய நூல்களில் தவறானது எது?

A) ரத்னாவளி

B) நாகநந்தா

C) பிரியதர்ஷிகா

D) சி–யூ–கி

5. சீன பௌத்தத் துறவி பாகியான் யாருடைய காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்?

A) முதலாம் சந்திரகுப்தர்

B) இரண்டாம் சந்திரகுப்தர்

C) சமுத்திரகுப்தர்

D) ஷர்ஷர்

6. நாணயங்களில் முதன்முதலாக இடம்பெற்ற குப்த அரசரின் வடிவம் யாருடையது?

A) முதலாம் சந்திரகுப்தர்

B) இரண்டாம் சந்திரகுப்தர்

C) ஸ்ரீ குப்தர்

D) சமுத்திரகுப்தர்

7. கல்வெட்டுகளில் மகாராஜா எனக் குறிப்பிடப்படும் குப்த அரசர்கள் யார்?

A) முதலாம் சந்திரகுப்தர், ஸ்ரீகுப்தர்

B) முதலாம் சந்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர்

C) கடோத்கஜர், இரண்டாம் சந்திரகுப்தர்

D) ஸ்ரீகுப்தர், கடோத்கஜர்

8. லிச்சாவி அரச குடும்பத்தை சேர்ந்த குமாரதேவியை மணந்த குப்த அரசர்

A) கடோத்கஜர்

B) ஸ்ரீகுப்தர்

C) முதலாம் சந்திரகுப்தர்

D) சமுத்திரகுப்தர்

9. லிச்சாவி அரச வம்சத்தின் ஆட்சிப் பகுதி எந்த இரு பகுதிகளுக்கிடையே அமைந்திருந்தது?

A) கங்கை – கோதாவரி

B) பஞ்சாப் – ஆப்கானிஸ்தான்

C) பஞ்சாப் – நேபாள்

D) கங்கை – நேபாள்

10. பிரயாகை மெய்க்கீர்த்தியை இயற்றிய ஹரிசேனர் யாருடைய அவைக்கள புலவராக திகழ்ந்தார்?

A) ஸ்ரீகுப்தர்

B) கடோத்கஜர்

C) முதலாம் சந்திரகுப்தர்

D) சமுத்திரகுப்தர்

11. குப்த வம்சத்தின் தலைச்சிறந்த அரசர் __________.

A) முதலாம் சந்திரகுப்தர்

B) இரண்டாம் சந்திரகுப்தர்

C) ஸ்ரீ குப்தர்

D) சமுத்திரகுப்தர்

12. கூற்று 1: பிரசஸ்தி என்பது ஒரு சமஸ்கிருதச் சொல்.

கூற்று 2: பிரசஸ்தி என்பதன் பொருள் ஒருவரைப் பாராட்டிப் புகழ்வதாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

13. பல்லவ நாட்டு அரசர் விஷ்ணு கோபனை ___________ என்பவர் தோற்கடித்தார்.

A) முதலாம் சந்திரகுப்தர்

B) இரண்டாம் சந்திரகுப்தர்

C) ஸ்ரீ குப்தர்

D) சமுத்திரகுப்தர்

14. கூற்று 1: வட இந்தியாவில் சமுத்திரகுப்தர் ஒன்பது அரசுகளைக் கைப்பற்றினார்.

கூற்று 2 : சமுத்திரகுப்தர், தென்னிந்தியாவைச் சேர்ந்த 21 அரசர்களைத் தனக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக்கி அவர்களை கப்பம் கட்டச் செய்தார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

15. கீழ்க்கண்ட எந்த பகுதியின் அரசர்கள் சமுத்திரகுப்தரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டனர்?

1. அஸ்ஸாம்2. கிழக்கு வங்காளம்3. நேபாளம்

4. மகாராஷ்டிரா 5. பஞ்சாபின் கிழக்குப் பகுதி

A) அனைத்தும்

B) 1, 2, 3

C) 1, 2, 5

D) 1, 2, 3, 5

16. சமுத்திரகுப்தர் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.

A) சமுத்திரகுப்தர் ஒரு விஷ்ணு பக்தராவார்.

B) போர்களில் வெற்றி பெற்றதன் நினைவாக நடத்தப்படும் வேதகால சடங்கான குதிரைகளைப் பலியிடும் வேள்வியைச் சமுத்திரகுப்தர் மீண்டும் நடைமுறைப்படுத்தினார்.

C) சமுத்திரகுப்தர் வெளியிட்ட தங்க நாணயம் ஒன்றில் அவர் வீணை வாசிப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

D) அவர் சித்திராங்கதன் எனும் பட்டம் பெற்றார்.

17. இலங்கையை சேர்ந்த ஸ்ரீ மேகவர்மன் எனும் பௌத்த அரசன் யாருடைய சமகாலத்தவர்?

A) ஸ்ரீகுப்தர்

B) கடோத்கஜர்

C) முதலாம் சந்திரகுப்தர்

D) சமுத்திரகுப்தர்

18. சாக அரசர்களைத் தோற்கடித்து மேற்கு மாளவத்தையும் குஜராத்தையும் கைப்பற்றிய குப்த அரசர்

A) ஸ்ரீ குப்தர்

B) கவிராஜா

C) விக்கிரமாதித்யர்

D) முதலாம் குமாரகுப்தர்

19. விக்கிரமாதித்யர் குறித்த கூற்றுகளில் சரியானதை தேர்ந்தெடு.

1. தென்னிந்திய அரசுகளோடு நட்பு றவைப் பேணினார்.

2. குதுப்மினாருக்கு அருகேயுள்ள இரும்புத் தூண் விக்கிரமாதித்யரால் உருவாக்கப்பட்டது என நம்பப்படுகிறது.

3. இவருடைய அவையில் நவரத்தினங்கள் என்று அறியப்பட்ட கலைஞர்கள் இருந்தனர்.

A) அனைத்தும்

B) 1, 2

C) 2, 3

D) 1, 3

20. தவறான இணையைத் தேர்ந்தெடு (நவரத்தினங்கள்)

A) அமரசிம்ஹர் – அகராதியியல் ஆசிரியர்

B) காளிதாசர் – சமஸ்கிருதப் புலவர்

C) தன்வந்திரி – மருத்துவர்

D) ஹரிசேனர் – சோதிடர்

21. பொருத்துக.

1. காகபானகர் – i) சோதிடர்

2. சன்கு – ii) கட்டடக்கலை நிபுணர்

3. வராகமிகிரர் – iii) வானியல் அறிஞர்
4. வராச்சி – iv) இலக்கண ஆசிரியர்
5. விட்டல் பட்டர் – v) மாயவித்தைக்காரர்
A) ii iii i v iv
B) iii i ii iv v
C) i ii iii iv v
D) iv v ii i iii

22. நரேந்திர சந்திரர், சிம்மசந்திரர், தேவஸ்ரீ என்ற பட்டப்பெயர்களை கொண்ட அரசர்
A) இரண்டாம் சந்திரகுப்தர்
B) கடோத்கஜர்
C) முதலாம் சந்திரகுப்தர்
D) சமுத்திரகுப்தர்

23. நாளந்தா பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர் யார்?
A) ஸ்ரீகுப்தர்
B) இரண்டாம் சந்திரகுப்தர்
C) முதலாம் சந்திரகுப்தர்
D) முதலாம் குமார குப்தர்

24. மிகச் சிறந்த குப்தப் பேரரசர்களில் கடைசி பேரரசர் யார்?
A) முதலாம் குமார குப்தர்
B) பாலாதித்யர்
C) முதலாம் சந்திரகுப்தர்
D) சமுத்திரகுப்தர்

25. குமார குப்தரைத் தொடர்ந்து அரசப் பதவியேற்ற குப்த அரசர்
A) முதலாம் குமார குப்தர்
B) பாலாதித்யர்
C) ஸ்கந்த குப்தர்
D) சமுத்திரகுப்தர்

26. குப்த பேரரசின் அங்கீகரிக்கப்பட்ட கடைசி அரசர் ________ ஆவார்.
A) முதலாம் குமார குப்தர்
B) பாலாதித்யர்
C) ஸ்கந்த குப்தர்
D) விஷ்ணுகுப்தர்

27. குப்தர்களின் ஆட்சியமைப்புக் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.
A) குப்த அரசர்கள் தெய்வீக உரிமைக் கோட்பாட்டினை நடைமுறைப்படுத்தினர்.
B) உயர்பதவிகளில் அமர்த்தப்பட்ட அதிகாரிகள் தண்டநாயகர் மற்றும் மகாதண்ட நாயகர் என அழைக்கப்பட்டனர்.
C) நிலவரி அரசின் முக்கிய வருவாயாக இருந்தது.
D) அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கும் முறை நடைமுறையில் இல்லை.

28. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. குப்தப் பேரரசு தேசம் அல்லது புக்தி எனும் பெயரில் பல பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டன.
2. பிராந்தியங்கள் உபாரிகா எனும் ஆளுநர்கள் நிர்வகித்தனர்.
3. பிராந்தியங்கள் விஷ்யா எனும் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டன.
4. கிராம அளவில் கிராமிகா, கிராமதியாகக்ஷா எனும் அதிகாரிகள் செயல்பட்டனர்.
A) அனைத்தும்
B) 1, 2, 3
C) 2, 3
D) 1, 2, 4

29. சரியான இணையைத் தேர்ந்தெடு.
1. பாலாதிகிரிதா – குதிரைப்படையின் தளபதி
2. மஹாபாலாதிகிரிதா – காலாட்படையின் தளபதி
A) 1 மட்டும்
B) 2 மட்டும்
C) 1, 2
D) எதுவுமில்லை

30. __________ என்பவரால் எழுதப்பட்ட நிதிசாரம் எனும் நூல் அரசுக்கருவூலத்தின் முக்கியத்துவத்தையும் வருமானத்திற்கான பல வழிகளையும் குறிப்பிடுகின்றது.
A) காளிதாசர்
B) காகபானகர்
C) வராச்சி
D) காமாந்தகர்

31. பொருத்துக.
1. க்ஷேத்ரா – i) மேய்ச்சல் நிலங்கள்
2. கிலா – ii) குடியிருப்பதற்கு உகந்த நிலங்கள்
3. அப்ரகதா – iii) வனம் அல்லது காட்டு நிலங்கள்
4. வஸ்தி – iv) தரிசு நிலங்கள்
5. கபத சரகா – v) வேளாண்மைக்கு உகந்த நிலங்கள்

A) ii iii i v iv

B) iii i ii iv v

C) v iv iii ii i

D) iv v ii i iii

32. குப்தர்கள் காலத்தில் சிரேஸ்தி மற்றும் சார்த்தவாகா என அழைக்கப்பட்டவர்கள் யார்?

A) இராணுவ தளபதி

B) தலைமை அமைச்சர்

C) அரசர்

D) வணிகர்கள்

33. கூற்று 1: சிரேஸ்தி பிரிவைச் சார்ந்த வணிகர்கள் ஓரிடத்தில் நிலையாக இருந்து வணிகம் செய்தனர்.

கூற்று 2: சார்த்தவாகா வணிகர்கள் எருது பூட்டிய வண்டிகளில் சரக்குகளை ஏற்றி பல்வேறு இடங்களுக்குச் சென்று வணிகம் செய்தனர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

34. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) நாளந்தா யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னமாகும்.

B) நாளந்தா பல்கலைக்கழகம் பக்தியார்கில்ஜி என்பாரின் தலைமையில் வந்த மம்லுக்குகளால் அழித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டது.

C) நாளந்தா பல்கலைக்கழகத்தில் யுவான் – சுவாங் சமணத் தத்துவத்தைப் பற்றிப் படிப்பதில் பல ஆண்டுகள் செலவழித்தார்.

D) நாளந்தா வளாகத்தில் எட்டு மகா பாடசாலைகளும் மூன்று மிகப்பெரிய நூலகங்களும் இருந்தன.

35. நாளந்தா பல்கலைக்கழகம் __________ நூற்றாண்டுகளில் குப்தப் பேரரசின் ஆதரவில் தழைத்தோங்கியது.

A) 4, 5

B) 5, 6

C) 3, 4

D) 7, 8

36. ஷுணர்கள் பற்றிய செய்திகளில் தவறான கூற்றைத் தேர்ந்தெடு

A) ஹுணர்கள் என்போர் நாடோடிப் பழங்குடியினராவர்.

B) தங்கள் மாபெரும் தலைவர் அட்டில்லாவின் தலைமையில், ரோமாபுரியையும் கான்ஸ்டான்டி நோபிளையும் பேரச்சத்திற்கு உள்ளாக்கினர்.

C) வெள்ளை ஹுணர்கள் மத்திய ஆசியா வழியாக இந்தியா வந்தனர்.

D) மிகிரகுலரை தோற்கடித்த பின்னர் இவர்கள் மத்திய பகுதிகளில் பரவினர்.

37. ஷுணர்களின் தலைவரான _________ தனக்குத்தானே அரசராக முடிசூட்டிக் கொண்டார்.

A) மிகிரகுலர்

B) யசோதவர்மன்

C) தோரமானர்

D) அட்டில்லா

38. தவறான இணையைத் தேர்ந்தெடு.(குப்தர்கள் காலத்திய துறைமுகங்கள்)

1. மேலைக் கடற்கரைத் துறைமுகங்கள் – கல்யாண், மங்களூர், மலபார்

2. கீழைக் கடற்கரைத் துறைமுகங்கள் – வங்காளத்திலிருந்த தாமிரலிப்தி

A) இரண்டும் சரி

B) 1 மட்டும் சரி

C) 2 மட்டும் சரி

D) இரண்டும் தவறு

39. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) குப்தர்களின் நாணய அமைப்பு முறையை அறிமுகப்படுத்தியவர் முதலாம் சந்திரகுப்தர்.

B) குப்தர்களின் பொற்காசுகள் தினாரா என்றழைக்கப்பட்டன.

C) குப்தர்கள் வெளியிட்ட பொற்காசுகளை விட வெள்ளி, செப்புக் காசுகள் குறைவாகவே வெளியிடப்பட்டன.

D) குப்தர்களுக்கு அடுத்து வந்த காலத்தில் பொற்காசுகளின் சுழற்சியில் வீழ்ச்சி ஏற்பட்டது.

40. கூற்று 1: குப்தர்கள் காலத்தில் சுரங்கத் தொழிலும் உலோகத் தொழிலும் செழிப்புற்று விளங்கின.

கூற்று 2: உலோகத் தொழில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டு சந்திரகுப்தரால் நிறுவப்பட்ட மெக்ராலி இரும்புத்தூணாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

41. குப்தர்களால் பயன்படுத்தப்பட்ட உலோகங்களில் தவறானது எது?

A) இரும்பு

B) தாமிரம்

C) ஈயம்

D) வெள்ளி

42. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) குப்தர் கால சமூகம் நான்கு வர்ணங்களைக் கொண்ட வர்ண முறையில் அமைந்திருந்தது.

B) குப்தர்கள் காலத்தில் மனுவின் சட்டங்கள் நடைமுறையில் இருந்தன.

C) பலதார மணம் நடைமுறையில் இல்லை.

D) உடன்கட்டை ஏறும் முறை குப்தர்கள் காலத்தில் பின்பற்றப்பட்டது.

43. குதிரைகளை பலி கொடுத்துச் செய்யப்படும் வேள்வியான அஸ்வமேத யாகத்தை நடத்திய குப்த அரசர்கள்

1. முதலாம் சந்திரகுப்தர் 2. சமுத்திரகுப்தர்

3. ஸ்ரீகுப்தர் 4. முதலாம் குமார குப்தர்

A) 1, 2

B) 1, 4

C) 1, 3

D) 2, 4

44. கூற்று 1: கட்டுமானக் கோவில்களை முதன்முதலாகக் கட்டியவர்கள் குப்தர்களே.

கூற்று 2: இது முன்பிருந்த மரபான, பாறைக் குடைவரைக் கோயில்களின் அடுத்த கட்டப் பரிணாம வளர்ச்சியாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

45. தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. எல்லோரா – மகாராஷ்டிரா

2. பாக் – உத்திரப்பிரதேசம்

3. உதயகிரி – ஒடிசா

A) 1, 2

B) 2, 3

C) 2 மட்டும்

D) 3 மட்டும்

46. சுல்தான் கஞ்ச் என்னுமிடத்திலுள்ள _________ அடி உயரமுள்ள புத்தரின் உலோகச் சிற்பம் குப்தர்களின் உலோகச் சிற்பத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

A) 5 B

B) 7 ½

C) 12

D) 18

47. குப்தர்களின் ஓவியக் கலைக்கு மிக சிறந்த எடுத்துக்காட்டுகளாக திகழ்பவை எவை?

1. அஜந்தா குகை ஓவியங்கள்

2.. குவாலியர் பாக் குகை ஓவியங்கள்

3. சுல்தான் கஞ்ச் குகை ஓவியங்கள்

4. உதயகிரி குகை ஓவியங்கள்

A) 1, 2

B) 2, 3

C) 1, 3, 4

D) 1, 2, 4

48. குப்தர்கள் _________மொழியை அலுவலக மொழியாக கொண்டிருந்தனர்.

A) பிராகிருதம்

B) சமஸ்கிருதம்

C) பாலி

D) லத்தீன்

49. கீழ்க்கண்டவற்றுள் காளிதாசர் இயற்றிய நூல்கள் எவை?

1. மாளவிகாக்னிமித்ரம் 2. மேகதூதம்

3. குமார சம்பவம் 4. ரிதுசம்காரம்

A) அனைத்தும்

B) 1, 2, 3

C) 1, 3

D) 2, 3

50. சந்திரகோமியா எனும் பௌத்த அறிஞர் இயற்றிய சந்திரவியாகரணம் என்பது ________ நூல்.

A) வானியல்

B) மருத்துவ

C) இலக்கண

D) கணிதம்

51. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) பாணினி – அஷ்டதியாயி

B) பதஞ்சலி – மகாபாஷ்யம்

C) சூரிய சித்தாந்தா – பிரம்மகுப்தா

D) சுஸ்ருதர் – அறுவை சிகிச்சை

52. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. தன்வந்திரி ஆயுர்வேத மருத்துவத்தில் நிபுணராகத் திகழ்ந்தார்.

2. சாரக்கர் ஒரு மருத்துவ அறிவியல் அறிஞராவார்.

3. சுஸ்ருதர் அறுவை சிகிச்சை செய்முறையைப் பற்றி விளக்கிய முதல் இந்தியர் ஆவார்.

A) அனைத்தும்

B) 2 மட்டும்

C) 1, 2

D) 2, 3

53. ரோமானியப் பேரரசர் மகா கான்ஸ்டன்டைனின் சமகாலத்திய குப்த அரசர்

A) ஸ்ரீகுப்தர்

B) இரண்டாம் சந்திரகுப்தர்

C) முதலாம் சந்திரகுப்தர்

D) முதலாம் குமார குப்தர்

54. கீழ்க்காண்பனவற்றில் காலவரிசைப்படி அமைந்துள்ளது எது?

A) ஸ்ரீகுப்தர் – முதலாம் சந்திரகுப்தர் – சமுத்திரகுப்தர் – விக்கிரமாதித்யர்

B) முதலாம் சந்திரகுப்தர் – விக்கிரமாதித்யர் – ஸ்ரீகுப்தர் – சமுத்திரகுப்தர்

C) ஸ்ரீகுப்தர் – சமுத்திரகுப்தர் – விக்கிரமாதித்யர் – முதலாம் சந்திரகுப்தர்

D) விக்கிரமாதித்யர் – ஸ்ரீகுப்தர் – சமுத்திரகுப்தர் – முதலாம் சந்திரகுப்தர்

winmeen.com